ஜனவரி 17, 2014.

காவல்துறையை அமைச்சர் கட்டுப்படுத்தலாமா?

அருண் ஜேட்லி.

மாநிலங்களவை எதிர்கட்சி தலைவர்.

ஒரு காவல்துறை அதிகாரி அமைசரின் கட்டளை படி நடக்க வேண்டியவரா? நிச்சயமாக இல்லை. காவல்துறை அதிகாரி சட்டதின் படி தன் கடமையை செய்கிறார். சந்தேகத்திற்குறியவரை அல்லது குற்றம்சாட்டப்பட்டவரை விசாரிக்க,தேட, கைது செய்ய, நடவடிக்கை எடுப்பதற்கான அவரது அதிகாரம் குற்றவியல் நடைமுறை மற்றும் சட்டங்களின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்படுகிறது.

1968ல் புகழ்பெற்ற பிரிட்டிஷ் நீதிபதி லார்ட் டென்னிங் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: இருப்பினும், இந்த மண்ணில் உள்ள ஒவ்வொரு காவலரை போல அவரும் அரசு அதிகாரத்தில் உள்ளவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வராதவர் என்று சொல்வதில் எனக்கு எந்த தயக்கமும் இல்லை. அமைச்சரின் கட்டளைக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர் அல்ல அவர். .. சட்டத்தை காப்பாற்றுவது , காவல்துறை கமிஷனரின் கடமை மற்றும் ஒவ்வொரு காவலரின் கடமை என்றே நான் கருதுகிறேன். குற்றங்களை கண்டறியும் வகையில் அவர் தனது காவலர்களை சரியான இடத்தில் நிறுத்த வேண்டும். இதன் மூலம் நேர்மையான குடிமகனகள் தங்கள் பணிகளை அமைதியாக செயல்படுத்த வழி செய்ய வேண்டும். சந்தேகத்திற்கு உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா ,வேண்டாமா என்று அவர் முடிவு எடுக்க வேண்டும். தேவைப்பட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது அதற்கு வழி செய்ய வேண்டும். ஆனால் இவை அனைத்திலும் அவர் யாருக்கும் கட்டுப்பட்டவர் அல்ல, சட்டத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டவர் . எந்த அமைச்சரும் அவர் என்ன செய்ய வேண்டும் என்றோ என்ன செய்யக்கூடாது என்றோ, இந்த இடத்தை கண்காணிக்கவும் என்றோ வேண்டாம் என்றோ, ஒருவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றோ எடுக்க கூடாது என்றோ அவரை கட்டளையிட முடியாது. எந்த காவல்துறை அதிகாரியும் இவ்வாறு சொல்ல முடியாது. சட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு முற்றிலும் அவரை சார்ந்தது. அவர் சட்டத்திற்கு மட்டுமே பதில் அளிக்க கடமைபட்டவர்.

1998ல் வினீத் நாராயன் ( ஜெயின் ஹவலா வழக்கு) வழக்கில் இதை இந்திய உச்சநீதிமன்றமும் உறுதி செய்துள்ளது. ஒரு காவல்துறை அதிகாரி சட்டத்துக்கு மட்டுமே கட்டுப்பட்டவர். சட்டத்தின் கீழான அவரது அதிகாரம் குடிமக்களின் வாழ்க்கை உரிமை மற்றும் சுதந்திரத்துக்கு பாதகம் இல்லாமல் இருக்க வேண்டும்.

அதிகாரத்தை செயல்படுத்தும் போது நடைமுறை பாதுகாப்பை மீறினால் அவர் சட்டத்துக்கு புறம்பாக நடந்து கொள்கிறார். ஒருவரின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான போராட்டமானது சட்டத்தை விட பாதுகாப்பு நடைமுறைகளை சார்ந்தது.
இதை இந்த சம்பவத்துடன் ஒப்பிட்டு பாருங்கள். 2000, ஜுலை 6 ல், அப்போதைய பிரிட்டன் பிரதமர் டோனி பிளேரின் 16 வயது மகன் லண்டனின் மேற்கு பகுதியில் குடித்து விட்டு நிலையில்லாமல் இருந்ததற்காக கைது செய்யப்பட்டார். தனது தந்தை பெயருக்கு களங்கம் வரக்கூடாது என்பதற்காக அவர் தவறான அடையாளத்தை தெரிவித்தார். சேரிங் கிராஸ் காவல்நிலையத்திற்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். அவர் லாகப்பில் வைக்கப்பட்டார். இதையடுத்து ,அப்போது போர்ச்சுகலில் விருமுறையில் இருந்த பிரதமர் டோனி பிளேர் மற்றும் அவரது மனைவி செரி , தங்கள் மகனுக்காக காவல் நிலையத்துக்கு வர வேண்டியிருந்தது. பிரதமர் பிளேர் மற்றும் திருமதி பிளேர் பொறுப்பானவர்களாக நடந்து கொண்டனர். அவர்கள் மகன் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டார். காவல்துறையினர் தன்னை தேடி வராமல் தான் காவல் நிலையத்திற்கு செல்ல வேண்டியிருந்ததை பிளேர் தவறாக நினைக்கவில்லை. பெற்றொராக இருப்பது கடினமானது என்றே அவர் கருத்து தெரிவித்திருந்தார். பிரதமர் காவல்துறையின் அதிகார்த்துக்கு கட்டுப்பட வேண்டியிருந்தது அதற்கு நேர்மாறாக இல்லை.
வருத்தம் தரும் வகையில் தில்லி மாநில அமைச்சர் ஒருவரது செயல் காரணமாக வெளிநாட்டை சேர்ந்த சில பெண்கள் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர்.அவர்கள் அடித்து துண்புறத்தப்பட்டு வலுக்கட்டாயமாக மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் மோசமான சோதனைக்கும் உடபடுத்தப்பட்டனர். இவை காவல்துறையால செய்யப்படவில்லை, ஆம் ஆத்மி கட்சி தொண்டர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எந்த ஒரு சிவில் சமூகத்திலும் அந்த அமைச்சர் தனது சட்டத்துக்கு புறம்பான செயலுக்காக பொறுப்பேற்று அவர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும். இதில் , அதிகம் அறியப்படாத ஒருவரான உதவி கமிஷனர் திரு.பி.எஸ்.ஜாக்கர் தனித்து நின்று மாரியாதைக்குறியவராக இருக்கிறார். அவர் அமைச்சருக்கு கீழ்படிய மறுத்து சட்டத்தின் பக்கம் நின்றுள்ளார். நாம் அனைவரும் ஜாக்கருக்கு தலை வணங்க வேண்டும்.